THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Saturday, 14th February 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

The Madras Lignite (Acquisition of Land) Act, 1953

* 2 *S.N.Q.*—SRI A. GOVINDASAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the decision of the High Court on the validity of the compensation provisions in the Madras Lignite (Acquisition of Land) Act, 1953; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) Certified copy of the judgment of the High Court is awaited.

SRI A. GOVINDASAMY: 1953-ம் வருஷத்திய நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் நெய்வேலி நிலக்கரி சுரங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்பது 1947-ல் என்ன விலை நிர்ணயம் செய்யப்பட்டதோ அப்படித்தான் கொடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால் ஹைக்கோர்ட்டு இன்றைக்கு அங்கே ரைஸ் மில் வைத்திருந்தவருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதை தற்போது இருக்கும் விலையை அனுசரித்துத்தான் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அதைப் போலவே நிலங்களுக்கும் கட்டடங்களுக்கும் அந்த முறையிலேயே நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: ஜட்ஜ்மெண்ட் காபி வந்தவுடன் அதன்மேல் அப்பீல் போட முடியுமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்து அதன் பிறகு தான் இதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR: தென்னாடு மிகவும் தேய்கிறது, வட நாடு வாழ்கிறது என்று பேசுகிறவர்கள், மற்றும் 36 அடி ரஸ்தா சும்மா போடவேண்டும் என்று சொல்லுகிறவர்கள், காம்பென்சேஷன் குறைவாகக் கொடுப்பதைப் பாராட்டாமல் பெரிய லிக்னைட் தொழிற்சாலையை தென் இந்தியாவில் தொழில் வளர்ச்சிக்காக கொண்டு வருவதை தலைவர்கள் ஆதரிக்கக்கூடாதா, காம்பென்சேஷனை எதாகிலும் விட்டுக்கொடுத்து, என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER: வீணான சண்டைக்கு என் இழுக்கிறீர்கள்? அது சரியல்ல. It is an insinuation. The first half of the question is unnecessary and irritating. The second half is relevant. I would request the hon. Member not to make insinuations. This is not allowed under the rules. If the Minister is prepared to answer, I have no objection.

[14th February 1959

SRI S. NAGARAJA MONIGAR : I want the co-operation of all in this matter, Sir.

MR. SPEAKER : I feel the hon. Member should set an example by asking questions which are non-irritating. The hon. Member puts irritating questions and when the other side retaliates, he gets angry. This is not proper. The hon. Member may put a direct question. No insinuation is necessary.

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் செய்யவேண்டிய காரியம் ஒன்றும் இல்லை.

SRI A. GOVINDASAMY : Sir, as this is an important matter, I request that a half-hour debate be allowed.

MR. SPEAKER : What have the Government to say in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இதில் அரை மணி நேர விவாதத்திற்கு என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை. ஏனென்றால் எங்களுக்கு ஜட்ஜுமெண்ட் காபி இன்னும் வரவில்லை. ஜட்ஜுமெண்ட் காபி வந்த பிறகு அதை சர்க்கார் பரிசீலனை செய்து, அதன் மேல் அப்பீல் செய்ய முடியுமா அல்லது முடியாதா என்பதைப்பற்றி யோசனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் இப்போழுது அரை மணி நேர விவாதத்திற்கு இடம் ஒன்றும் இல்லை.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் சொன்ன பிரகாரம் பிறகு பார்க்கலாம். அடுத்த கேள்வி.

Wheat

* 321 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to increase the supply of wheat to this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Imported wheat is made available in sufficient quantities at all the Central Storage depots in this State.

SRI N. K. PALANISAMI : போதுமான கோதுமை இருக்கிறது என்று செல்லும்போது இப்பொழுது கோதுமை படி ஒன்றுக்கு 11, 12 அணு என்று விற்கப்படுவதற்குக் காரணம் என்ன? கோதுமை போதுமான அளவில் கிடைக்க சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் கோதுமை நியாய விலைக்கடைகளில் விற்கப்படுகிறது, அதுவும் சப்சிடைஸ்ட் ரேட்டாக விற்கப்படுகிறது. ஆனால் அரிசியின் விலையைவிட கோதுமையின் விலை அதிகமாக உயர்ந்திருக்கிறது. இருந்தபோதிலும் பழைய விலையிலேயே கோதுமையை நியாய விலைக் கடைகளில் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதனால் அதன் விலையை இன்னும் குறைப்பதற்கு இடம் இல்லை.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware of the fact that there is shortage of maida in the State? If so, what steps have been taken by the Government to increase the production of maida?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This is being looked into now and then.